Private E-Sevai Center
CSC Center
STAR RAINBOW SERVICES
VADAPALANI
8144337349

ஹலோ மிரர் மெட்ராஸ்
hellomadrasdaily@gmail.com RNI No.TNBIL/2021/81709 தினசரி காலை நாளிதழ்
உள்ளது உள்ளபடி

KARUNAII TRUST
அன்னை சிறப்பு பள்ளி
Contact :
98413 59935



# மனிதனை விண்ணுக்கு அனுப்பும் ககன்யான் திட்டத்தில் பெண் விண்வெளி வீராங்கனை

சென்னை, 28 அக்டோபர் 2023: மனிதனை விண்ணுக்கு அனுப்பும் ககன்யான் திட்டத்தில் பெண் விண்வெளி வீராங்கனையை அனுப்பும் திட்டமும் இஸ்ரோவிடம் உள்ளது என்று விஞ்ஞானிகள் கூறினர்.

மனிதனை விண்ணுக்கு அனுப்பும் ககன்யான் திட்டத்திற்காக, ஆந்திர மாநிலம் ஸ்ரீஹரிகோட்டாவில் உள்ள சதீஷ் தவான் விண்வெளி ஆய்வு மையத்தில் இருந்து டிவி-டி1 என்ற சோதனை ராக்கெட் மூலம் விண்கலம் கடந்த 21-ந்தேதி விண்ணில் ஏவி இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனம் (இஸ்ரோ) வெற்றிகரமாக சோதனை நடத்தியது.

இதனை தொடர்ந்து, இன்னும் சில மாதங்களில் அதிக சோதனை பணிகளை இஸ்ரோ வரிசைப்படுத்தி உள்ளது. குறிப்பாக, இஸ்ரோ இன்டர்ஷியல் சிஸ்டம்ஸ் யூனிட்டால் (ஐ.ஐ.எஸ்.யு) வடிவமைத்து உருவாக்கப்பட்ட 'வியோமித்ரா' என்ற 'பெண்' ரோபோ எல்.வி.எம்--3 ராக்கெட் மூலம் விண்வெளியில் உள்ள சுற்றுப்பாதைக்கு அனுப்பி சோதனை நடத்தப்பட இருக்கிறது.





இதில் குறிப்பாக, இஸ்ரோ கட்டுப்பாட்டு அமைப்புகள், வெப்ப பாதுகாப்பு அமைப்புகள் மற்றும் பாராசூட் அமைப்புகள் சோதனை செய்யப்பட உள்ளது. தொடர்ந்து ஏர்-டிராப் டெஸ்ட் (ஐஏடிடி) மற்றும் பேட் அபார்ட் டெஸ்ட் என்ற 2 அறிவியல் சோதனைகள் செய்யப்பட உள்ளது. அடுத்து வரும் 4 சோதனைகளில் டி.வி-டி-2 ராக்கெட் சோதனை 2-வதாக இருக்கும். ஏற்கனவே அனுப்பிய டிவி-டி-1 ராக்கெட் போல் இல்லாமல், டிவி-டி-2 ராக்கெட்டில் இருந்து விண்கலம் பிரிந்த உடன், விண்கலத்தின் அணுகுமுறையை அறிந்து கொள்வதற்கு மீண்டும் நிலைப்படுத்துவதற்கான ஒரு கட்டுப்பாட்டு அமைப்பையும் கொண்டிருக்கும்.

மனிதனை விண்ணுக்கு அனுப்பும் ககன்யான் திட்டத்தில் பெண் விண்வெளி வீராங்கனை அனுப்பும் திட்டமும் இஸ்ரோவிடம் உள்ளது. இது எதிர்காலத்தில் சாத்தியமாகும். அத்துடன், டிவி-டி-1 ராக்கெட்டில் இருந்து கடலில் உப்பு நீரில் விழுந்த விண்கலத்தை மீண்டும் பயன்படுத்த முடியுமா? இதற்கான சாத்தியக்கூறுகள் குறித்து ஆராய்ச்சி நடந்து வருகிறது.

இதை மீண்டும் பயன்படுத்துவதற்கான திட்டத்தையும் வகுத்து வருகிறோம். இதற்காக விண்கலத்தை திறந்து சுத்தம் செய்து என்ன செய்யலாம் என்று பார்க்க வேண்டியிருக்கிறது. ககன்யான் திட்டத்தின் கீழ் பொருத்தமான சோதனைத் திட்டத்திற்கு அதை திருப்ப முயற்சிகள் எடுக்கப்படும் '2040-ம் ஆண்டுக்குள் மனிதர்களை நிலவுக்கு அனுப்புவது உட்பட, இந்தியாவிற்கான லட்சிய விண்வெளிப் பயண இலக்குகளில் முதன்மையானது ககன்யான் ஆகும்' என்று இஸ்ரோ விஞ்ஞானிகள் கூறினர்.

# காங்கிரஸ் மீண்டும் ஆட்சிக்கு வந்தால் மாட்டு சாணம் கிலோ ரூ.2க்கு வாங்கப்படும் ராஜஸ்தான் முதலமைச்சர் வாக்குறுதி

சென்னை, 28 அக்டோபர் 2023: ராஜஸ்தானில் காங்கிரஸ் கட்சி மீண்டும் ஆட்சிக்கு வந்தால் விவசாயிகளிடம் இருந்து மாட்டு சாணம் கிலோ ரூ.2க்கு வாங்கப்படும் என






முதலமைச்சர் அசோக் கெலாட் வாக்குறுதி அளித்தார்.

ராஜஸ்தானில் அடுத்த மாதம் (நவம்பர்) 25ந்தேதி சட்டசபை தேர்தல் நடைபெறுகிறது. அங்கு ஆட்சியை தக்க வைக்க காங்கிரஸ் கட்சி தீவிரமாக பிரச்சாரம் மேற்கொண்டு வருகிறது.

இதற்கிடையே மக்களுக்கு பல்வேறு தேர்தல் வாக்குறுதிகளையும் வழங்கி வருகிறது. அந்த வகையில் மாநிலத்தில் மீண்டும் ஆட்சி அமைத்தால் குடும்ப தலைவிகளுக்கு ஆண்டுக்கு ரூ.10 ஆயிரம், ஏழை குடும்பங்களுக்கு ரூ.500-க்கு கியாஸ் சிலிண்டர் போன்ற வாக்குறுதிகளை முதலமைச்சர் அசோக் கெலாட் ஏற்கனவே அறிவித்து இருந்தார்.

இதைத்தொடர்ந்து மேலும் 5 வாக்குறுதிகளை நேற்று அவர் வெளியிட்டார். இது தொடர்பாக செய்தியாளர்களிடம் அவர் கூறியதாவது:-

ராஜஸ்தானில் காங்கிரஸ் கட்சி மீண்டும் ஆட்சி அமைத்தால், கோதான் திட்டத்தின் கீழ் விவசாயிகளிடம் இருந்து மாட்டு சாணம் கிலோ ரூ.2-க்கு வாங்கப்படும்.

தேசிய பேரிடர் இழப்புகளுக்காக ரூ.15 லட்சம் காப்பீடு வழங்கப்படும். பழைய ஒய்வூதிய திட்டத்தை உறுதி செய்ய சட்டம் இயற்றப்படும்.

பள்ளிக்கல்வி ஆங்கில வழியில் நடத்தப்படும். அரசு கல்லூரிகளில் சேரும் மாணவர்களுக்கு முதல் ஆண்டிலேயே லேப்டாப் அல்லது டேப்லெட் வழங்கப்படும்.

மாநில சட்டசபை தேர்தலுக்கான காங்கிரசின் தேர்தல் அறிக்கை வருகிற நாட்களில் வெளியிடப்படும். அதில் மேலும் அறிவிப்புகள் இடம்பெறும்.

பிரதமர் மோடியே எங்கள் வாக்குறுதிகளைத்தான் பின்பற்றுகிறார்.

மத்திய அரசு அமலாக்கத்துறையை தவறாக பயன்படுத்துகிறது. நாட்டில் நாய்களை விட அமலாக்கத்துறை அதிகாரிகள்தான் அதிகமாக அலைகிறார்கள் என ஒரு முதலமைச்சர் (பூபேஷ் பாகேல்) சொல்கிறார். இதைவிட பெரிய துரதிர்ஷ்டம் வேறு என்ன இருக்க முடியும்?

எவ்வளவு வலியுடன் இந்த கருத்தை அவர் கூறியிருப்பார் என்பதை நினைத்துப்பாருங்கள். விசாரணை அமைப்புகள் அரசியல் ஆயுதமாகி விட்டன. மோடி ஜி, உங்கள் கவுண்ட்டவுன் தொடங்கிவிட்டது என்பதை நீங்கள் புரிந்து கொள்ளவில்லை.

இவ்வாறு அசோக் கெலாட் கூறினார்.

இ-சேவை மையம்
ஸ்டார் ரெயின்போ சர்வீசஸ்
11,SOUTH PERUMAL KOIL STREET, VADAPALANI, CHENNAI - 600 026.
8148231942 / 8144337349
பொது இ-சேவை மையம்
ALL ONLINE SERVICES

ஹலோ மிரர் மெட்ராஸ்
hellomadrasdaily@gmail.com தினசரி காலை நாளிதழ்
உள்ளது உள்ளபடி



# 'அர்ஜுன் சக்ரவர்த்தி - ஜர்னி ஆஃப் அன் சங் சாம்பியன்' திரைப்படத்தின் சுவாரசியமான முதல் பார்வை வெளியீடு



சென்னை, 28 அக்டோபர் 2023: ஸ்ரீனி குப்பலா தயாரிப்பில் விக்ராந்த் ருத்ரா எழுத்து மற்றும் இயக்கத்தில் விரைவில் வெளிவரவிருக்கும் திரைப்படமான 'அர்ஜுன் சக்ரவர்த்தி, ஜர்னி ஆஃப் எ அன்சாங் சாம்பியன்' முதல் பார்வை (ஃபர்ஸ்ட் லுக்) வெளியாகி உள்ளது.

விஜய ராமராஜு மற்றும் சிஜா ரோஸ் முதன்மை வேடங்களில் நடித்துள்ள இப்படத்தில் அஜய், தயானந்த் ரெட்டி, அஜய் கோஷ் மற்றும் துர்கேஷ் ஆகியோர் முக்கிய கதாபாத்திரங்களில் தோன்றுகின்றனர்.

'அர்ஜுன் சக்ரவர்த்தி' திரைப்படம் 1980களில் இந்தியாவுக்காக விளையாடிய கபடி வீரரின் உண்மைக் கதையை அடிப்படையாகக் கொண்டது. ஒரு விளையாட்டு வீரரின் வாழ்க்கையில் ஏற்படும் போராட்டங்கள் மற்றும் வெற்றிகளை திரையில் காட்டும் படமாக இது அமையும்.

இன்று வெளியிடப்பட்ட ஃபர்ஸ்ட் லுக்கில் அர்ஜுன் சக்ரவர்த்தி ஸ்டேடியத்தின் நடுவில் கையில் பதக்கத்துடனும் முகத்தில் பெருமிதத்துடனும் இருப்பதைக் காணலாம். இந்திய கபடியில் அர்ஜுன் சக்ரவர்த்தியின் தாக்கம் 1980களில் இந்திய கிரிக்கெட்டில் கபில் தேவின் தாக்கத்திற்கு இணையாக உள்ளது என்ற வாசகம் எதிர்பார்ப்பை அதிகரிக்கும் வகையில் அமைந்துள்ளது. விஜய ராமராஜு இந்த பாத்திரத்திற்காக தன்னுடைய உடலை சிறப்பாக கட்டமைத்துள்ளார்.

சிறந்த தொழில்நுட்பக் கலைஞர்கள் இப்படத்திற்காக இணைந்துள்ளனர். விக்னேஷ் பாஸ்கரன் இசையமைக்க, ஜெகதீஷ் சீக்கட்டி ஒளிப்பதிவு செய்ய, சுமித் படேல் கலை இயக்கத்தை கவனிக்க பிரதீப் நந்தன் படத்தொகுப்புக்கு பொறுப்பேற்றுள்ளார். தமிழ் மற்றும் தெலுங்கில் ஒரே நேரத்தில் படமாக்கப்பட்டுள்ள 'அர்ஜுன் சக்ரவர்த்தி', மலையாளம், கன்னடம், இந்தி ஆகிய மொழிகளில் டப் செய்யப்பட்டு பான்-இந்தியா படமாக வெளியாக உள்ளது.

'அர்ஜுன் சக்ரவர்த்தி: ஜர்னி ஆஃப் எ அன்சாங் சாம்பியன்' குறித்து பேசிய தயாரிப்பாளர் ஸ்ரீனி குப்பலா, "இது ஒரு திரைப்படமாக மட்டுமில்லாமல், சவால்களை தாண்டி நம் அனைவரையும் ஊக்குவிக்கும் மனிதர்களின் அசைக்க முடியாத மன உறுதிக்கான எடுத்துக்காட்டாக அமையும். கனவை நனவாக்க முழு மூச்சாக உழைத்தால் இலக்கை எட்டிவிடலாம் என்பதை இப்படம் வெளிப்படுத்தும்," என்றார்.

தொடர்ந்து பேசிய அவர், "ஒரு குழுவாக இணைந்து நாங்கள் உருவாக்கியுள்ள இப்படம் குறித்து நாங்கள் பெருமிதம் கொள்கிறோம். இதற்காக அயராது பணியாற்றிய நடிகர்கள், தொழில்நுட்பக் குழுவினர் உள்ளிட்ட அனைவருக்கும் நன்றி. அர்ஜுன் சக்ரவர்த்தியின் வாழ்க்கையை இப்படம் வெளிச்சம் போட்டுக் காட்டுவதால், இந்த பயணத்தில் எங்களுடன் சேர அனைவரையும் அழைக்கிறோம். இது சொல்லப்பட வேண்டிய கதையாகும்," என்று தெரிவித்தார்.

இயக்குநர் விக்ராந்த் ருத்ரா கூறுகையில், ""அர்ஜுன் சக்ரவர்த்தி: ஜர்னி ஆஃப் அன்சாங் சாம்பியன்' படத்தை இயக்கியது பெருமையாக உள்ளது. அர்ஜுன் சக்கரவர்த்தியின் கதையை திரையில் உயிர்ப்பிக்கும் பயணம் சவாலாக இருந்தது. அர்ப்பணிப்பு, விடாமுயற்சி மற்றும் தன்னம்பிக்கை ஆகியவற்றிலிருந்து வெற்றி பிறக்கிறது என்ற பழமொழிக்கு அர்ஜுன் சக்ரவர்த்தியின் வாழ்க்கை ஒரு சான்றாகும். எங்களின் ஆர்வத்தையும் அர்ப்பணிப்பையும் புரிந்து கொண்டு பகிர்ந்து கொள்ளும் திறமையான நடிகர்கள் மற்றும் குழுவினருடன் பணியாற்றியது மிக்க மகிழ்ச்சி," என்றார்.

"அர்ஜுன் சக்ரவர்த்தியாக விஜய் ராமராஜுவின் உழைப்பு உண்மையிலேயே அசாதாரணமானது. அர்ஜுன் சக்ரவர்த்தியின் பாத்திரத்தை சிறப்பாக வெளிப்படுத்தும் வகையில் எட்டு விரிவான உடல் மாற்றங்களுக்கு தன்னை அவர் உட்படுத்திக் கொண்டார். அவரது நடிப்பால் பார்வையாளர்கள் ஈர்க்கப்படுவார்கள் என்று நாங்கள் நம்புகிறோம்," என்று அவர் மேலும் தெரிவித்தார்.

மன உறுதி, உழைப்பு மற்றும் ஒருவரின் கனவுகளின் அசைக்க முடியாத நாட்டம் ஆகியவற்றின் கதை இது. இந்த சினிமா பயணத்தின் ஒரு அங்கமாக இருந்து எங்களை ஆதரிக்குமாறு ரசிகர்களை கேட்டுக் கொள்கிறேன் என்று இயக்குநர் விக்ராந்த் ருத்ரா கூறினார்.

# டிவிஎஸ் கிரெடிட் தனது வாடிக்கையாளர்களின் பண்டிகை கால தேவையை பூர்த்தி செய்யும் வகையில் அற்புதமான சலுகைகளை அறிவித்துள்ளது

சென்னை, 28 அக்டோபர் 2023: இந்தியாவின் மிக வேகமாக வளர்ந்து வரும் என் பி எஃப் சிகளில் ஒன்றான டிவிஎஸ் கிரெடிட், வாடிக்கையாளர்களின் தேவைகளைப் பூர்த்திசெய்வதற்கான நிதி நெகிழ்வுத்தன்மையை வழங்குவதை நோக்கமாகக்கொண்டு, 40,000க்கும் அதிகமான தொடர்பிடங்களில் அணுககூடிய, அற்புதமான கடன் சலுகைகளின் ஒரு தொகுப்பை வெளியிட்டுள்ளது.

இரு சக்கர வாகனக் கடன்களுக்கு, வாடிக்கையாளர்கள், 95% நிதியுதவி, 60 மாத கடன் காலம் மற்றும் பிரத்யேக தள்ளுபடி வவுச்சர்கள் போன்றவற்றை வழங்கும் திட்டங்களைப் பெறலாம். மொபைல் ஃபோன்களை மேம்படுத்தவும் மற்றும் நுகர்வோர் உபகரணங்களை வாங்கவும் விரும்பும் வாடிக்கையாளர்கள் செலவில்லா ணிவிமி நன்மைகள், வழங்கப்பட்ட கடன் தொகைக்கு சமமான தள்ளுபடி வவுச்சர்கள் அடுத்தடுத்த வாங்குதல்களுக்கு கேஷ்பேக் ஆகியவற்றுடன் அதன் கன்ஸ்யூமர் லோன்ஸ் இலிருந்து பயனடையலாம், கூடுதலாக, நிறுவனம் அதன் முதன்மையான நுகர்வோர் ஊக்குவிப்பு பிரச்சாரமான "மேஜிக்கல் தீவாளி " "மாயாஜால தீபாவளி"யின் 6வது சீசனையும் துவக்கியுள்ளது. இந்த முழு ஒருங்கிணைக்கப்பட்ட சந்தைப்படுத்தல் முயற்சியானது வாடிக்கையாளர்களை டிஜிட்டல் தொடர்பிடங்கள் மற்றும் இன்-ஸ்டோர் ஊடாடல்கள் மூலம் தீவிரமாக ஈடுபடுத்துகிறது. இதன் ஒரு பகுதியாக, இந்த பிரச்சாரக் காலத்தில் அவர்களாகவே டிவிஎஸ் கிரெடிட் இன் கடனைப் பெறும் வாடிக்கையாளர்கள், ஒரு செல்ஃபியை எடுத்தல்/ஸ்லோகம் எழுதுதல் மற்றும் நிறுவனத்தின் சமூக ஊடகத் தளங்களில் அதை பகிர்தல் போன்ற போட்டியில் கலந்துகொள்வதன் மூலம் தினசரி மற்றும் மெகா பரிசுகளை வெல்லலாம். இந்த போட்டி தற்போது நேரலையில் உள்ளது மற்றும் நவம்பர் 30, 2023 வரை தொடரும்.

டிவிஎஸ் கிரெடிட், இந்த பண்டிகைக் காலத்தைப் பயன்படுத்திக் கொள்ளவும், அவர்களின் அபிலாஷைகளை நிறைவேற்றவும் இந்த பிரத்யேக சலுகைகளைப் பயன்படுத்திக் கொள்ள அனைவரையும் அழைக்கிறது.

# அகர்சந்த் மான்மல் ஜெயின் கல்லூரியில் - புதுமையும் சிறப்பும் நிறைந்த 'தடம் -'23 '



சென்னை, 28 2023: அகர்சந்த் மான்மல் ஜெயின் கல்லூரி பெரும் ஆவலுடன் எதிர்பார்க்கப்பட்ட கல்விசார் கண்காட்சி - தடம் '23 -ஐ பெருமையுடன் நடத்தியது. இந்த சிறப்புமிகு நிகழ்வு பல்வேறு துறை சார்ந்த நூற்றுக்கும் மேற்பட்ட கல்வி சார் திட்டங்களை ஒருங்கிணைத்தது. கல்லூரிக்கு அருகாமையில் ஐந்து கிலோமீட்டர் தொலைவிலிருந்த அரசு மற்றும் தனியார் பள்ளிகளைச் சேர்ந்த 951 மாணவர்கள் இக்கண்காட்சியில் ஆர்வத்துடன் பங்கேற்றனர். கற்றல் மற்றும் புதுமைகளை வளர்த்தெடுக்கும் கல்வி சார் கண்காட்சி மாணவர்களின் அர்ப்பணிப்பு உணர்வை வெளிப்படுத்தியது. ஜெயின் கல்லூரி மாணவர்கள், கலை, மனிதநேயம், அறிவியல் சுற்றுச்சூழல் மற்றும் பொருளாதார அறிவு முதல் அதிநவீன இயந்திரவியல் (ரோபாட்டிக்ஸ்) மற்றும் நவீன கருவிகளைப் பயன்படுத்துவது குறித்த பாதுகாப்பு அம்சங்கள் வரையிலான பல ஆய்வுத் திட்டங்களைக் காட்சிப்படுத்தினர்.

குற்றவியல் மற்றும் காவல்துறை நிர்வாகம், (சி பி ஏ) போர் மற்றும் பாதுகாப்பு துறைகளைச் (டி ஈ எஸ்) சேர்ந்த மாணவர்கள் தடயவியல் துறையில் உள்ள சவால்கள் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தினர். குற்றங்களைக் களைவதற்காகப் பயன்படுத்தப்படும் அதிநவீன கைரேகை அடையாள நுட்பங்களை வெளிச்சம் போட்டுக் காட்டினர்.

கல்வி சார்ந்த கண்காட்சியின் சிறப்பம்சமாக ரோபோட்டிக்ஸ் மற்றும் தடயவியல் துறையில் பயன்படுத்தப்படும் நவீன மேம்பட்ட கைரேகை கண்டறியும் முறைகள் கல்விசார் கண்காட்சியின் சிறப்பம்சமாக அமைந்திருந்தது. கண்காட்சியில் காட்சிப்படுத்தப்பட்ட தானியங்கி வீட்டு உபகரணங்கள், தீ எச்சரிக்கைக்கருவி, கைரேகை முறையிலான கதவு பூட்டு, இயந்திரக் கருவிகளைக் கட்டுப்படுத்தும் தானியங்கிக் கருவி (சி என் சி பிளாட்டர்), லேசர் அமைப்பு மூலமான பாதுகாப்பு முறைகள், மற்றும் திரவ நிலை கண்டறியும் கருவி உள்ளிட்ட இயந்திரவியல் (ரோபோட்டிக்ஸ்)திட்டங்கள், பங்கேற்பாளர்களைப் பெரிது கவர்ந்தது.

கல்விசார் கண்காட்சி குறித்துக் கருத்துத் தெரிவித்த அகர்சந்த் மான்மல் ஜெயின் கல்லூரியின் புலத்தலைவர் டாக்டர் ரம்யா அவர்கள் "புதுமைகளை ஊக்குவித்தல் மற்றும் எதிர்காலத் தலைவர்களை வடிவமைத்தல் என்ற நோக்கில் நடத்தப்பட்ட இக்கண்காட்சி கல்வியின்வலிமையை புலப்படுத்துவதாக அமைந்திருந்தது. காட்சிப்படுத்தப்பட்ட ஆய்வு மாதிரிகளெங்கள் மாணவர்களின் அளப்பறிய திறனை எடுத்துக்காட்டியதோடு மட்டுமல்லாமல் அவர்கள் சிறந்து விளங்க தொடர்ந்து இது போன்ற நிகழ்வுகள் தொடர்ந்து நடத்தப்பட வேண்டும் என்ற சிந்தனைக்கும் இடமளித்தது. கல்வி மற்றும் தொழில் துறையில் சிறந்த முறையில் தங்களை நிலைநிறுத்திக் கொள்ளவும் நாள்தோறும் மாறிவரும் உலகின் சவால்களை நம்பிக்கையுடனும், புத்தி கூர்மையுடனும் எதிர்கொள்ளவும் இந்த அனுபவங்கள் பயனுள்ளதாக அமையும் என்பதில் ஐயமில்லை. எங்கள் மாணவர்கள் செயல்முறை அறிவு மற்றும் கண்டுபிடிப்பு உணர்வுடன் இருப்பதைப் பார்ப்பது மிகவும் மகிழ்வளிக்கிறது. மேலும், அவர்களுக்கு தொடர்ந்து ஊக்கம் அளிக்கும்வகையில் வாய்ப்புகள் தொடர்ந்து வழங்கப்பட வேண்டிய கடப்பாடும் எங்களுக்குள்ளது. இது போன்ற வாய்ப்புகளால் எங்கள் மாணவர்கள் நாளைய தலைவர்களாக உருவாவார்கள் என்பதும் உறுதி' என்ற தன் கூற்றை முன்வைத்தார்.

கல்விசார் கண்காட்சி - தடம் '23 - அகர்சந்த் மான்மல். ஜெயின் கல்லூரி தங்கள் மாணவர்களின் படைப்பாற்றலையும் அறிவையும் கண்டு பெருமிதம் கொள்கிறது. மாணவர்கள் ஆர்வத்துடன் பங்கேற்பதற்கான வாய்ப்பாக இந்நிகழ்வு அமைந்திருந்தது. ஆய்வுப் பார்வை, விமர்சன சிந்தனை மற்றும் சிக்கலான நிலைப்பாட்டிலிருந்து விடுபடுவது, ஆகிய இப்பண்புகள் மாணவர்களுக்கு இன்றைய வளர்ந்து வரும் உலகில் தேவைப்படும் இன்றியமையாத திறன்களாகும். ரோபோடிக்ஸ் முதல் தடயவியல் வரையிலான இச்செயல்திட்ட வெளிப்பாடு, எங்கள் மாணவர்களின் அறிவினை விரிவுபடுத்தியது, அவர்கள் தங்களின் அறிவையும் ஆர்வத்தையும் வளர்த்துக் கொள்வதற்கான புதுமையான சூழலைக் கொடுத்தது.. இந்த நிகழ்வு கல்வி மற்றும் தொழில் துறையில் வெற்றிபெறுவதற்கான அறிவுத் தாக்கத்தை அவர்களிடையே ஏற்படுத்தியுள்ளது. அகர்சந்த் மான்மல் ஜெயின் கல்லூரி, மாணவர்களுக்கு இது போன்ற வாய்ப்புகளை தொடர்ந்து வழங்குவது என்பதில் உறுதியுடன் உள்ளது, இந்நிலைப்பாடு எங்கள் மாணவர்கள் ஆய்வுப் பணிகளில் ஈடுபடவும் கல்விசார் நிலையில் மேம்பாடு அடையவும், எதிர்காலத்தில் தலைவர்களாகவும் தொலைநோக்கு பார்வையாளர்களாக வளரவும் உந்துசக்தியாக அமையும்.

# நிவேதிதா வழங்கும் 'அலங்காரா ஸ்டோர்' பெண்களுக்கான பிரத்தியேக ஆடையகம்



சென்னை, 28 அக்டோபர் 2023: சென்னை லஸ் சர்ச் சாலையில் உள்ள கிரியேட்டிவ் என்கிளேவில் தொழில்முனைவோரான நிவேதிதா மற்றும் அவரது தந்தை திரு. ஏ.டி. புருஷோத்தமன் ஆகியோர் அலங்காரா ஸ்டோர் என்ற பெண்களுக்கான பிரத்தியேக ஆடையகத்தை திறந்து உள்ளனர் அழகின் தரத்தை மறுவரையறை செய்து பெண்களுக்கு தன்னம்பிக்கையை அளிப்பதே இதன் முக்கிய நோக்கம் ஆகும். இந்த ஸ்டோர் பிளஸ்-சைஸ் பாணியில் ஒரு திருப்புமுனையாகும். அலங்காரா ஸ்டோர், பெண்களுக்கான ஷாப்பிங் அனுபவத்தை மறுவடிவமைத்து, பரந்த அளவிலான ஆயத்த சல்வார் உடைகள் மற்றும் டாப்ஸ்களை வழங்குகிறது, சிறியது முதல் 8 எக்ஸ் எல் வரையிலான அளவுகளை வழங்குகிறது. அவர்களின் சேகரிப்பில் டிசைனர் சல்வார் சூட்கள், தனிப்பயன் ஆடை பொருட்கள், அலியா கட் பிரிண்டட் குர்திகள், நைரா கட் குர்திகள், பிரத்யேக பிரைடல் எம்பிராய்டரி பிளவுஸ்கள் மற்றும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திற்கும் ஏற்ற உடைகள் ஆகியவை அடங்கும். கூடுதலாக, வாடிக்கையாளர்கள் தங்கள் தனித்துவமான ஆடைகளை வடிவமைத்து கொள்ள தைக்கப்படாததுணிகளையும் வழங்குகிறார்கள் அலங்காரா ஸ்டோரின் முதன்மையான குறிக்கோள் தன்னம்பிக்கையை அதிகரிப்பதும், அழகு தரத்தை சீரமைப்பதாகும். அவர்களின் உள்ளடக்கிய அளவு வரம்பு, எஸ் முதல் 8 எக்ஸ் எல் வரை, ஒவ்வொரு பெண்ணும் ஒரு ஆடையைத் தேர்தெடுப்பதை உறுதிசெய்கிறது, அது அவளுக்கு அழகாகவும், நம்பிக்கையுடனும் மற்றும் அதிகாரம் அளிக்கும். உடல் அளவுதான் அழகைத் தீர்மானிக்கிறது என்ற தவறான கருத்தை முறியடித்து பெண்களுக்கு பொருத்தமான ஆடைகளை தேர்தெடுத்து அணிய செய்து நம்பிக்கையை ஊட்டுவதை நோக்கமாகக் கொண்டுள்ளனர்.

அழகுக்கு அளவே தெரியாது என்பதற்கு அலங்காரா ஸ்டோர் சான்றாக விளங்குகிறது. பிளஸ்-சைஸ் பெண்களுக்கான வரையறுக்கப்பட்ட விருப்பங்களால் நீங்கள் எப்போதாவது விரக்தியடைந்திருந்தால், அலங்காரா ஸ்டோர் உங்களை சுய-கண்டுபிடிப்புக்கான பயணத்தைத் தொடங்க உங்களை அழைக்கிறது, அங்கு உங்கள் அழகின் தரத்தை நீங்கள் மறுவரையறை செய்யலாம்.

ஹலோ மிரர் மெட்ராஸ்
hellomadrasdaily@gmail.com தினசரி காலை நாளிதழ்
உள்ளது உள்ளபடி



# "உயிருள்ள வரை நடித்துக் கொண்டே இருப்பேன்" மிரியம்மா ஆடியோ வெளியீட்டில் நடிகை ரேகா !!



சென்னை, 28 அக்டோபர் 2023: □□ரீ சாய் பிலிம் பேக்டரி பட நிறுவனத்தின் சார்பில் அறிமுக இயக்குநர் மாலதி நாராயணன் தயாரித்து இயக்கி இருக்கும் திரைப்படம் "மிரியம்மா.." நடிகை ரேகா இப்படத்தில் முக்கிய கதாபாத்திரத்தில் நடித்திருக்கிறார். அவரோடு வி.ஜே.ஆஷிக், எழில் துரை, ஸ்நேகா குமார், அனிதா சம்பத், மாலதி நாராயணன் மற்றும் பலர் நடித்திருக்கும் இப்படத்தின் பாடல்களுக்கு ஏ.ஆர். ரெஹானா இசையமைத்திருக்கிறார். மூன் ராக்ஸ் குழுவைச் சேர்ந்த இளைஞர்கள் பின்னணி இசை அமைத்திருக்கிறார்கள். ஜேஷன் வில்லியம்ஸ் ஒளிப்பதிவை கையாள, யாத்திசை புகழ் ரஞ்சித் கலை இயக்குநராகப் பணியாற்றியிருக்கும் இப்படத்தின் டிரைலர் மட்டும் இசை வெளியீட்டு விழா சென்னையில் நடந்தது.

விழாவில் பேசிய நடிகர் ஆஷிக், இந்த மிரியம்மா படத்தின் புராஜக்ட் மிக வேகமாக நடந்து முடிந்திருப்பதாக எனக்குத் தோன்றுகிறது. ஏனென்றால் சில படங்களின் பர்ஸ்ட் லுக் போஸ்டர் இந்தாண்டு விஜயதசமிக்கு வெளியாகும், படம் அடுத்த ஆண்டு தீபாவளிக்கு வெளியாகும். அப்படியெல்லாம் இங்கு நடப்பது சகஜம். ஆனால் இந்த படத்தின் வேலைகளை இவ்வளவு வேகமாக முடித்திருக்கும் இயக்குநர் மாலதி நாராயணுக்கு நன்றிகளும் வாழ்த்துக்களும் கூறிக் கொள்கிறேன். ரேகா மேடம் பழகுவதற்கு மிகவும் இனிமையானவர்கள். படப்பிடிப்புத் தளத்தில் அவர்கள் கொண்டு வந்த உணவை கூட்டாஞ்சோறு போல எல்லோருக்கும் பகிர்ந்து கொடுப்பார்கள். அதில் ஒரு தாய்மை உணர்வு இருக்கும். 2017ல் செஞ்சிட்டாளே என் காதலை படம் வெளியான போதிருந்தே எனக்கு எழிலை நன்றாகத் தெரியும்.. அப்படத்தின் டிரைலரைப் பார்க்கும் போதே இப்படம் நன்றாக இருக்கும் என்கின்ற உணர்வை ஏற்படுத்தியது. ஏ.ஆர்.ரெஹனா எனக்கு மிகவும் பிடித்த இசையமைப்பாளர், என் படத்திற்கு அவர் இசையமைப்பாளராக கிடைத்தது மிகப்பெரிய பாக்கியம். யாத்திசை படத்தில் இருந்தே கலை இயக்கத்தில் ரஞ்சித் மிரட்டி வருகிறார். அந்த மிரட்டல் இப்படத்திலும் தொடர்கிறது. என் நட்புக்காக கடைசி நேரத்தில் அழைத்தும் கூட இந்த நிகழ்ச்சிக்கு வந்திருக்கும் விஜய் வர்மாவிற்கு என் நன்றிகள். இது போன்ற சிறு முதலீட்டு திரைப்படங்களுக்கு பத்திரிக்கை நண்பர்களான நீங்கள் முழு ஆதரவு அளிக்க வேண்டும். இப்படத்தை மக்களிடம் கொண்டு போய் சேர்த்து மிகப்பெரிய வெற்றியடையச் செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.." என்று பேசினார்.

நடிகர் எழில் பேசும் போது, சிறு முதலீட்டுப் படங்களே தேவை இல்லை என்று பேசிக் கொண்டு இருக்கும் போது, இந்த சிறு முதலீட்டுப் படத்திற்கு ஆதரவு தந்து இவ்வளவு பத்திரிக்கை நண்பர்கள் வந்திருக்கிறீர்கள். உங்களுக்கு நன்றி. இப்படத்தின் இயக்குநர் மாலதி நாராயணன் ஒரு டாக்டர், அயர்லாந்தில் படித்து செட்டில் ஆனவர். அவர் இங்கு வந்து ஒரு தமிழ்ப்படத்தை இயக்கி தயாரித்து சிறப்பான முறையில் வெளியீட்டிற்கு கொண்டு வந்திருப்பது மிகப்பெரிய சாதனை. அவர் வேலை செய்யும் வேகத்தைப் பார்த்தால் எனக்கு பிரமிப்பாக இருக்கிறது. ஏ.ஆர்.ரெஹனா மேடத்தின் பாடல்களை படப்பிடிப்பில் ஒலிக்கச் செய்து, அதைக் கேட்டுக் கொண்டே தான் பாடல் படப்பிடிப்பு நடந்தது. மிகச்சிறப்பான பாடல்களைக் கொடுத்த அவருக்கு நன்றி. அது போல் பின்னணி இசை அமைத்திருக்கும் மூன்ராக் குழுவினருக்கும் வாழ்த்துக்கள். கண்டிப்பாக இந்தப் படத்தின் கதை மிகவும் வித்தியாசம் ஆனது. நீங்கள் அனைவரும் இப்படத்திற்கு ஆதரவு தர வேண்டும்." என்று கேட்டுக் கொண்டார்.

மிரியம்மா படத்திற்கு பின்னணி இசை அமைத்திருக்கும் "மூன் ராக்" குழுவினர் பேசும் போது, "மிகவும் எமோஷ்னலாக இருக்கிறது. பெரிய பெரிய இசையமைப்பாளர்களின் பெயர்களை எழுதிய பத்திரிக்கையாளர்கள் எங்களது பெயரை இசையமைப்பாளர் என்று எழுதப் போவதை நினைத்தால் பெருமையாக இருக்கிறது. இப்படம் வெற்றியடைய ஆதரவு தாருங்கள்" என்று பேசினர்.

படத்தின் இசையமைப்பாளர் ஏ.ஆர்.ரெஹானா பேசும் போது, "ஒளிப்பதிவாளர் ஜேஷனின் அறிமுகத்தால் தான் நான் இப்படத்திற்குள் வந்தேன். இயக்குநர் மாலதி நாராயணன் தேனீயைப் போல் சுறுசுறுப்பானவர், இருக்கின்ற எல்லா வேலைகளையும் அவர் பார்ப்பார். தயாரிப்பு, இயக்கம் மட்டுமின்றி படப்பிடிப்பு தளத்தில் தேவைப்படும் சிறு சிறு வேலைகளைக் கூட கூச்சமின்றி இறங்கிச் செய்வார். இக்கதை மிகவும் வித்தியாசமான கதை, நடிகை ரேகாவிற்கு இக்கதை மிகவும் பிடித்திருக்கிறது என்று கூறினார். நடிகை ரேகா எனக்கு நெருங்கிய தோழி போன்றவர், இப்படத்தில் பின்னணி இசை அமைத்திருக்கும் மூன் ராக் குழுவினருக்கு என் வாழ்த்துக்கள். இத்திரைப்படம் மிகப்பெரிய வெற்றியை பெறும் என்று நம்புகிறேன்" என்று பேசினார்.

நடிகை ரேகா பேசும் போது, "நீண்ட இடைவெளிக்குப் பிறகு பத்திரிக்கை நண்பர்களை சந்திப்பது மிகவும் மகிழ்ச்சி அளிக்கிறது. நான் முப்பது ஆண்டுகளுக்கும் மேலாக சினிமாவில் நடித்துக் கொண்டிருக்கிறேன். இதை நினைக்கும் போது சந்தோஷமாகவும் பெருமையாகவும் இருக்கிறது. இப்படி ஒரு வாய்ப்பை எனக்குக் கொடுத்த அந்தக் கடவுளுக்கும், பத்திரிக்கை நண்பர்களாகிய உங்களுக்கும் என் நன்றிகளை தெரிவித்துக் கொள்கிறேன். அது போல் என் உயிரினும் மேலான என் ரசிகர்களுக்கும் நன்றி கூறிக் கொள்கிறேன். ஒரு படத்தில் நாம் நடித்த கதாபாத்திரத்தின் பெயரைச் சொல்லி நம்மை யாராவது அழைக்கும் போது மிகவும் சந்தோஷமாகவும் பெருமையாகவும் இருக்கும். தமிழில் ஜெனிபர் டீச்சர், ரஞ்சனி, உமா போன்ற கதாபாத்திரங்கள் எனக்கு அப்படி அமைந்தது. அது போல் மலையாளத்தில் ராணி, மீனுக்குட்டி போன்ற கதாபாத்திரங்கள் பேர் சொல்வது போல் அமைந்தது. அந்த வரிசையில் கண்டிப்பாக இந்த மிரியம்மாவும் இடம் பெறும் என்று நம்புகிறேன். செல்போனில் இயக்குநர் கதை சொல்லும் போதே என் மனதில் பட்டாம்பூச்சி பறக்கத் துவங்கிவிட்டது. இந்த கதாபாத்திரத்தில் ஏதோவொன்று இருக்கிறது, விட்டுவிடாதே என்று என் மனம் குதூகலித்தது. இந்தப் படத்தில் நடிப்பதற்கு வாய்ப்பளித்த இயக்குநருக்கு என் நன்றிகள். இப்படத்தில் நான் எழிலுக்கு தாயாக நடித்திருக்கிறேன். எங்களுக்குள் அந்த பாண்டிங் வந்தால் தான் காட்சிகள் இயல்பாகத் தெரியும். ஆனால் நான் பல படங்களில் நடித்த சீனியர் என்பதால் எழில் ஆரம்பத்தில் விலகியே இருந்தான்.. பின்னர் நான் அவனை "டேய் இங்க வாடா" என்று உரிமையாக அழைத்துப் பேசத் துவங்கியதும் எழில் இயல்பாகி விட்டான். காட்சிகளும் அருமையாக வந்திருக்கின்றது.

நான் நடித்த சில கதாபாத்திரங்கள் சற்று திமிர் பிடித்த கதாபாத்திரங்கள் என்பதால் என்னைப் பார்ப்பதற்கு அப்படித் தெரியும். ஆனால் நான் உண்மையில் அப்படி இல்லை. என்னைப் போன்ற நடிகைகளுக்கு இப்பொழுது பணம் ஒரு பொருட்டல்ல, நாங்கள் வித்தியாசமான கதாபாத்திரங்களில் நடித்து எங்களை நிருபிக்க விரும்புகிறோம். நாற்பது வயது ஆகிவிட்டாலே கறிவேப்பிலையை தூக்கி எறிவது போல் எங்களை எறிந்துவிடுகிறார்கள். கமர்ஸியல் திரைப்படங்களால் கதாநாயகிக்கான முக்கியத்துவம் போய் விட்டது. எல்லோரும் என்னை ஃபாரினில் சென்று செட்டில் ஆகிவிட்டீர்களா..? என்று கேட்கிறார்கள். நான் எப்பொழுதுமே சென்னையில் இருக்கவே விரும்புகிறேன்.. நிறைய திரைப்படங்களில் நடிக்க விரும்புகிறேன்ஞ் உயிருள்ள வரை நடித்துக் கொண்டே இருக்க வேண்டும் என்பது என் ஆசை. சின்ன பட்ஜெட்டில் தொடங்கிய இப்படம் முடியும் போது பெரிய பட்ஜெட் திரைப்படமாக மாறிவிட்டது. இப்படத்திற்கு நீங்கள் ஆதரவு தந்து படத்தை வெற்றிப்படமாக மாற்ற வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்" என்று பேசினார்.

படத்தின் இயக்குநர் மாலதி நாராயணன் பேசும் போது, "இப்படம் தொடங்கும் போது நான், ஆஷிக் மற்றும் கேமராமேன் ஜேஷன் மட்டுமே இருந்தோம். இங்கு இருக்கும் அனைவரையும் இந்த புராஜக்டிற்குள் அழைத்து வந்தது ஆஷிக்கும் ஜேஷனும் தான். அவர்களுக்கு என் நன்றிகள். முதலில் நான் இப்படத்தை தயாரிக்கும் எண்ணத்தில் இல்லை. இயக்கவே விரும்பினேன். பின்னர் ஒரு சூழலில் இப்படத்தை தயாரிக்க வேண்டிய நெருக்கடிக்கு தள்ளப்பட்டேன். இப்படத்தில் நிறைய நபர்கள் உள்ளே வந்துவிட்டுப் பின்னர் வெளியேறி இருக்கிறார்கள். ஒரு தயாரிப்பு நிறுவனம் கூட இப்படத்தை தயாரிக்க முன் வந்தது. ஆனால் படத்தின் பூஜைக்கு மூன்று நாட்கள் இருக்கும் போது, அந்நிறுவனம் காணாமல் போனது. எங்கு போனார்கள் என்றே தெரியவில்லை. இன்னும் தேடிக் கொண்டிருக்கிறோம்.

அவர்கள் யாருக்கும் என் மீது நம்பிக்கை இல்லை. அயர்லாந்தில் இருந்து வந்திருக்கிறார்கள். படத்தை எடுத்து முடிப்பார்களா..? பாதியிலேயே நிறுத்திவிட்டு வெளிநாடு சென்று விடுவார்களாஞ்? என்று பல சந்தேகங்கள் அவர்களுக்கு. அவர்களால் எங்களை நம்ப முடியவில்லை. அவர்கள் இந்த புராஜெக்டை விட்டு வெளியேறியது ஒருவிதத்தில் நல்லது என்றே தோன்றுகிறது. அதனால் தான் எனக்கு என் மீதான நம்பிக்கை அதிகரித்தது. என்னை நம்பி இவ்வளவு பெரிய அணி உருவாகி இருந்ததால் ஒரு கட்டத்தில் நானே தயாரிக்க முன் வந்து இப்படத்தை தயாரித்திருக்கிறேன். மீண்டும் படம் தயாரிப்பேனா என்று தெரியாது. ஆனால் கண்டிப்பாக படம் இயக்குவேன்.

இங்கு எழில் சிறுமுதலீட்டுப் படங்கள் எடுக்க வேண்டியதில்லை என்று யாரோ பேசியதைக் குறித்துப் பேசினார். சிறு முதலீட்டுப்படங்களே எடுக்கக் கூடாது என்று கூறினால் அறிமுக இயக்குநர்களுக்கான எல்லா கதவுகளும் அடைபட்டுவிடும். ஏற்கனவே படம் செய்த இயக்குநர்கள் மட்டும்தான் திரும்ப திரும்ப படம் செய்வார்கள். முதல் வாய்ப்பு என்பது மிகப்பெரிய விசயம், அதனால் தான் மூன் ராக் குழுவினரை கண்டிப்பாக இப்படத்தில் பின்னணி இசைக்கோர்ப்பு பணிகளில் பயன்படுத்த வேண்டும் என்பதில் உறுதியாக இருந்தேன். அவர்களின் திறமை மீது எனக்கு நம்பிக்கை இருக்கிறது. என்னுடைய அளவிற்கு இது பெரிய முதலீட்டுப் படம் தான். எனக்கு எல்லா விதத்திலும் உறுதுணையாக இருந்த என் குழுவினர் அனைவருக்கும் என் நன்றிகள். பத்திரிக்கை நண்பர்கள் இப்படத்தை பார்த்து ஆதரவு அளிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்." என்று பேசினார்.

தற்போதைய பிக் பாஸ் சீசனில் இருந்து சமீபத்தில் வெளியேற்றப்பட்ட விஜய் வர்மா பேசும் போது, "நட்பின் அடிப்படையில் தான் இந்த நிகழ்வில் வந்து கலந்து கொண்டேன். நான் வெளியேற்றப்படுவேன் என்று நினைக்கவில்லை. மக்கள் தரும் ஆதரவைப் பார்க்கும் போது வியப்பாகவும் சந்தோசமாகவும் இருக்கிறது. மீண்டும் ஒரு வாய்ப்பு கிடைத்து உள்ளே சென்றால் இன்னும் சிறப்பாக விளையாட வேண்டும் என்று விரும்புகிறேன்." என்று பேசினார்.

# "டைகர் 3'யில் நாங்கள் என்ன வைத்திருக்கிறோம் என்பதில் 1 % கூட நீங்கள் பார்த்திருக்க மாட்டீர்கள்" ; மனீஷ் சர்மா



சென்னை, 28 அக்டோபர் 2023: 'டைகர் 3'யின் டீசர் மற்றும் டிரைலரின் நம்பமுடியாத வெற்றி, அதை பார்த்து ரசிப்பதற்கு அதிகம் எதிர்பார்க்கப்படும் கண்கவர் ஆக்சன் படமாக மாற்றியுள்ளது என்கிற இயக்குநர் மனீஷ் சர்மா, யஷ்ராஜ் பிலிம்ஸ் 'டைகர் 3'யின் ஒவ்வொரு விஷயத்தையும் ரகசியமாக அதே சமயம் புத்திசாலித்தனமாக நடத்தி வருகிறது" என்கிறார்..

மனீஷ் கூறும்போது, "டைகரின் கதை எப்படி நகரும் என்பதை காட்டும் விதமாக'டைகர் 3'யின் டீசரையும் டிரைலரையும் நாங்கள் உருவாக்கினாலும், அதனுள்ளே பெரிய திரையில் மிகச்சிறந்ததாக காட்டுவதற்காக என்ன வைத்திருக்கிறோம் என்பதில் 1 % கூட நீங்கள் பார்த்திருக்க முடியாது" என்கிறார்.

யஷ்ராஜ் பிலிம்ஸின் ஸ்பை யுனிவர்ஸில் இருந்து லேட்டஸ்ட்டாக வெளியான 'டைகர் 3'யின் டீசர் மற்றும் டிரைலர் இரண்டுமே, இந்த பண்டிகை காலத்தில் திரையரங்குகளில் படம் பார்க்கும் ரசிகர்களின் அட்ரிலினை அதிகம் சுரக்கவைக்கும் ஆக்சன் கொண்டாட்டமாக இருக்கும் என்பதை உறுதிப்படுத்துகிறது. இந்திய சினிமாவின் மெகா ஸ்டார்களான சல்மான் கான் மற்றும் கத்ரீனா கைப் இருவரும் தங்களது சூப்பர் உளவாளி கதாபாத்திரங்களான டைகர் மற்றும் சோயா என்கிற அடையாள கதாபாத்திரங்களுக்கு திரும்பியுள்ளனர்.

மனீஷ் மேலும் கூறுகையில், "படத்தின் 50 முதல் 60 சதவீதம் வரை மிக பிரமாண்டமான ஆக்சன் காட்சிகளை கொண்டதாக இருக்கும். மேலும் நீங்கள் இதில் என்ன எதிர்பார்க்கலாம் என்பதற்கான ஒரு சிறிய பார்வையை உங்களுக்கு தருவதற்கு நாங்கள் விரும்பினோம்.. நீங்கள் இந்தப்படத்தை பார்க்கும்போது உணரும் ஆச்சரியமும் பரவசமும் நீங்கள் கொஞ்சமும் எதிர்பாராததாக இருக்கவேண்டும் என நாங்கள் விரும்புகிறோம்.

டைகர் 3 போல ஒரு படத்தை பார்க்கிறீர்கள் என்றால் நீங்கள் பொறுமையாக இருப்பதுடன் எதிர்பார்ப்பை வளர்த்துக் கொள்வதும் ரொம்பவே முக்கியமானது. எல்லாவற்றையும் முன்கூட்டியே கொடுத்துவிட்டோம் என்றால்.. ? நீங்களே கொஞ்சம் கற்பனை செய்து பாருங்கள்.. அதனால் தான் மிகுந்த உற்சாகம் தரும் எங்கள் படத்தின் சில காட்சிகளை 'டைகர் 3'யின் டிரைலரில் கூட காட்டவில்லை. எனவே தியேட்டரில் ரசிகர்கள் படத்தை பார்க்கும்போது விசிலடித்தும் மூச்சுத்திணறும் அளவுக்கு சத்தமிட்டும் உற்சாகத்துடன் படத்தை பார்க்க முடியும்" என்கிறார். மனீஷ் மேலும் கூறும்போது, "'டைகர் 3' பெரிய திரைக்கான கண்கவர் காட்சி என்பதால் மக்கள் திரையரங்கின் உள்ளே அமர்ந்து ஆச்சர்யத்துடன் பார்த்து ரசிக்கவேண்டும் என நாங்கள் விரும்புகிறோம். திரையரங்குளில் உறுமலுடன் வரப்போகும் 'டைகர் 3' அவர்களுக்கான இந்த வருடத்தின் தீபாவளி கொண்டாட்டமாக இருக்கவேண்டும் என்றும் நாங்கள் விரும்புகிறோம். அதை நாங்கள் செய்யமுடியும் என்றால் 'டைகர் 3' குழுவினருக்கு அதுதான் மிகுந்த மகிழ்ச்சியை கொடுப்பதாக இருக்கும்" என்கிறார்.

வரும் நவ-12ல் தீபவாளி வெளியீடாக ஹிந்தி, தமிழ் மற்றும் தெலுங்கில் 'டைகர் 3' வெளியாகிறது.

# "குளியலறையில் டவல் சண்டைக்காட்சியை படமாக்கியபோது அழகான காவியமாக இருந்தது" ; 'டைகர் 3' நடிகை மிஷ்ஷேல் லீ



சென்னை, 28 அக்டோபர் 2023: அதிரடியான சண்டைக்காட்சிகளை படமாக்குவதற்கு பெயர் பெற்ற ஹாலிவுட் நடிகை மிஷ்ஷேல் லீ, ஸ்கார்லட் ஜாக்சனுடன் 'பிளாக் விடோ'விலும், ஜானி டெப்புடன் 'பைரேட்ஸ் ஆப் தி கரீபியன்ஸ்' படத்திலும் பிராட் பிட்டுடன் 'புல்லட் ட்ரெய்ன்' மற்றும் டாம் ஹார்டியுடன் 'வெனோம்' படத்திலும் நடித்திருக்கிறார்.. தற்போது சல்மான் கான் மற்றும் கத்ரீனா கைப் நடிப்பில் கண்கவர் ஆக்சன் படமாக உருவாகியுள்ள 'டைகர் 3' படத்திலும் நடித்துள்ளார். இப்படத்தில் கத்ரீனாவுடன் நீண்ட நேரம் இடம்பெறக்கூடிய ரொம்பவே வைரலான துருக்கி குளியலறை சண்டைகாட்சி ஒன்றிலும் நடித்திருக்கிறார்.

'டைகர் 3' டிரைலரிலிருந்து அந்த டவல் சண்டைக்காட்சி மிகப்பெரிய பேசுபொருளாக ஆகியிருக்கிறது என்பதில் மிஷ்ஷேல் லீக்கு பெரிய ஆச்சர்யம் எதுவும் இல்லை.. கத்ரீனாவும் தானும் இந்த காட்சியை படமாக்குவதற்கு முன்னதாக இரண்டு வாரங்களுக்கு மேல் ஒத்திகை பார்த்தோம் என கூறுகிறார் மிஷ்ஷேல் லீ. அவர் கூறும்போது, "நான் ஆச்சர்யப்படவில்லை. நாங்கள் இதை படமாக்கியபோது அழகான காவியமாக இருந்தது. இரண்டு வாரங்களுக்கு மேல் நாங்கள் இந்த சண்டைக்காட்சியை கற்றுக்கொண்டதுடன் பயிற்சியும் எடுத்துக்கொண்டு அதன் பின்னரே இதை படமாக்கினோம். இதற்காக வடிவமைக்கப்பட்ட அரங்கு உண்மையிலே அழகியலாக இருந்ததுடன் இந்த சண்டைகாட்சியில் நடிப்பதற்கு உண்மையிலேயே வேடிக்கையாகவும் இருந்தது. இப்பிடி இரு சர்வதேச திரைப்படத்தில் இடம்பெற்றிருந்தது அற்புதமாக இருந்தது" என்கிறார்.

ஆக்சன் காட்சிகளில் நடிக்கும்போது கத்ரீனாவின் அர்ப்பணிப்பு உணர்வை பார்த்து அவரை இன்னும் புகழ்ந்து தள்ளுகிறார் மிஷ்ஷேல். அவர் கூறுகையில், "கத்ரீனாவால் அழகாகவும் தொழில்முறை நடிகையாகவும் இருக்க முடிந்தது. துல்லியமான நகர்வுகளை பெற கடினமாக அவர் உழைத்துடன் அனைத்து நகர்வுகளுமே வேகமாக இருப்பதையும் அவர் உறுதி செய்தார். நடனத்தில் அவருக்கு அனுபவம் இருந்ததால் அவருடன் இணைந்து பணியாற்றுவது ரொம்பவே எளிதாக இருந்தது. நாங்கள் வியர்வை சிந்தி உழைத்தோம்" என்கிறார்..

மிஷ்ஷேல் கூறுகையில் டவல்களால் அவர்களது உடல்களை சுற்றிலும் மறைத்தபடி இந்த குளியலறை காட்சியில் நடித்தது மிகப்பெரிய சவாலாக இருந்தது என்கிறார்

மேலும் அவர் கூறும்போது, "குறிப்பாக அலமாரி காட்சியில் நடித்தது முக்கிய சவால்களில் ஒன்றாக இருந்தது. எங்களது டவல்கள் குறிப்பிட்ட சரியான இடங்களில் பொருந்தியிருக்க வேண்டியிருந்தது. அதனுடன் அதிகப்படியான நகர்வுகளுடன் இந்த சண்டைக்காட்சியை படமாக்கியது நிச்சயமாக ஒரு சவால் தான். சில நேரங்களில் டவல்களின் முக்கிய பகுதி கிழிந்துபோய் அதை தைத்து பயன்படுத்தியதும் எங்களுக்கு உதவிகரமாக இருந்தது" என்கிறார்.

மேலும் அவர் கூறுகையில், "இன்னொரு சவால் என்னவென்றால் பார்ப்பதற்கு அபாயகரமானதாகவும் வலிமையானதகவும் தெரிந்தாலும் ஒருவருக்கொருவர் எங்களை காயப்படுத்தி விடாமல் இருப்பதற்காக நாங்கள் ஒருவருக்கொருவர் ஒரு சரியான தூரத்தை கடைபிடிக்க வேண்டி இருந்தது. ஒருவேளை அப்படி அவரை நிஜமாகவே நான் தாக்கியிருந்தால் உங்களால் நினைத்து பார்க்க முடிகிறதா ?. ஆனால் நான் தொழில்முறை தெரிந்தவள். அதனால் நாங்கள் எங்களை தாக்கிக்கொள்ளாமலேயே கேமரா முன்பாக அந்த வேலையை செய்ய வேண்டி இருந்தாலும், அனைத்தும் ரொம்பவே மென்மையாக நடந்தன" என்கிறார்.

யஷ்ராஜ் பிலிம்ஸின் ஸ்பை யுனிவர்ஸ் படமாக ஆதித்யா சோப்ரா தயாரிப்பில் மனீஷ் சர்மா இயக்கத்தில் இந்த 'டைகர் 3' உருவாகியுள்ளது. இந்தப்படம் இந்தவருட தீபாவளி ரிலீஸாக வரும் நவம்பர்-12ஆம் தேதி ஞாயிறன்று ஹிந்தி, தமிழ் மற்றும் தெலுங்கில் வெளியாகிறது.

"printed by R.SATHYANARAYANAN and published by R.SATHYANARAYANAN on behalf of R.SATHYANARAYANAN and printed at Chennai Offset Printers No.19/1, 21/2, Kitabath Khan Bhandur street, Ellis Road, Chennai-600 002, and published at No.11, South Perumal Koil Street, Vadapalani, Chennai - 600 026 Editor R.SATHYANARAYANAN"

# “டைகர் நாகேஸ்வர ராவ்” தெலுங்கு திரைப்படத்தின் இயக்குனர் வம்சி கிருஷ்ணாவுடன் நேர்காணல்

## திரைப்படத்தின் வெற்றிக்கு முக்கிய காரணம் நடிகர் ரவி தேஜா! அவர் இயக்குனர்களின் நடிகர்!! தனக்கு பலமான காயம் ஏற்பட்ட போதும் ”கவலைப்படாதீர்கள்” என்று சொல்லி அடுத்த இரண்டு நாட்களிலேயே ஷூட்டிங்கிற்கு வந்து முடித்து கொடுத்தார்.

## கதாபாத்திரத்திற்கு தக்கபடி தன்னுடைய உடல்மொழியை மாற்றி ரசிகர்கள் பாராட்டும் வகையில் நடிப்பவர் ரவி தேஜா!

## ”நாயகன்” படத்தின் தாக்கமே “டைகர் நாகேஸ்வர ராவ்” இது வரை வெளிச்சத்திற்கு வெளிவராத ஒரு உண்மைப் போராளியின் கதை

## “வயதில் சிறியவராக இருந்தாலும் வம்சியிடமிருந்து கண்ணாலும் நடிக்க முடியும் என்பதை, கற்றுக் கொண்டேன்” - அனுபம் கேர்

### பேட்டி: ரா சத்தியநாராயணன் ஆசிரியர் ஹலோ மிரர் மெட்ராஸ்

**சென்னை, 28 அக்டோபர் 2023: இந்த திரைப்படத்தின் பிளாக் பஸ்டர் ஹிட் வெற்றிக்கு காரணம் நடிகர் ரவி தேஜா, இயக்குனர் குழு, கதை, திரைக்கதை, நடிகர்கள், இசையமைப்பாளர், ஒளிப்பதிவாளர், ஸ்டண்ட் மாஸ்டர், அனைத்து தொழில்நுட்ப கலைஞர்கள் உள்ளிட்ட அனைவரின் கூட்டு முயற்சியே ஆகும் என்று இயக்குனர் வம்சி கிருஷ்ணா கூறினார்.**

**கேள்வி: டைகர் நாகேஸ்வர ராவ் திரைப்படத்தில் ரவி தேஜாவை முதல் முறை இயக்கியதில் கிடைத்த அனுபவத்தைச் சொல்லுங்கள்.**

பதில்: ரவி தேஜா அவர்கள் எப்போதுமே இயக்குனர்களின் எதிர்பார்ப்பை பூர்த்தி செய்யும் நடிகர். அவர் இயக்குனர்களுக்கு முழு சுதந்திரம் அளிப்பார். ஷூட்டிங் வந்தபிறகு எந்த கேள்வியும் கேட்கமாட்டார். இந்தத் திரைப்படம் வெற்றிகரமாக வெளிவந்ததற்கு முக்கிய காரணம் அவர் எனக்கு அளித்த சுதந்திரமே. இந்தத் திரைப்படத்தில் அவர் புது அவதாரம் எடுத்து நடித்துள்ளார் என்று அனைவரும் பாராட்டுகின்றனர்.

**கேள்வி: ரவிதேஜா ஆரம்பகாலத்தில் இருந்த நடிப்புத் திறமை இப்போது மெருகேறி உள்ளதா? உங்கள் கருத்து என்ன?**

பதில்: ரவிதேஜா இயற்கையிலேயே மிகவும் திறமை வாய்ந்த நடிகர் என்றாலும் அவர் இயக்குனரின் எதிர்பார்ப்புக்குத் தக்கபடி சிறப்பாக தனது நடிப்பை வெளிப்படுத்துவார். தான் முன்பு நடித்த 73 திரைப்படங்களில் இந்தத் திரைப்படம் மிகவும் சிறப்பு வாய்ந்தது என்று ரவிதேஜா அவர்களே சொல்லியுள்ளார். இந்த திரைப்படத்தில் அவருடைய கதாபாத்திரம் மிகவும் வித்தியாசமானதாக இருக்கும்.

**கேள்வி: இந்த டைகர் நாகேஸ்வர ராவ் திரைப்படத்தில் ஏதாவது பிரச்சனை ஏற்பட்டதா? அதை எப்படி சமாளித்தீர்கள்?**

பதில்: சுமார் 100 கோடி ரூபாய் செலவில் தயாரான இந்த திரைப்படத்தில் பிரச்சனைகள் எதுவும் பெரிதாக ஏற்படவில்லை. ஆனால் மிகவும் கஷ்டப்பட்டு ஷூட்டிங் முடித்து வெளியிட்டுள்ளோம். இந்த திரைப்படத்தின் சண்டைக் காட்சியின் போது ரவி தேஜா அவர்களுக்கு பலமாக காயம் ஏற்பட்டது. நாங்கள் ஷூட்டிங் நடைபெறுமா என்று மிகவும் கவலைப்பட்டிருந்தோம். ஆனால் அவர் ”கவலைப்படாதீர்கள்” என்று சொல்லி அடுத்த இரண்டு நாட்களிலேயே ஷூட்டிங்கிற்கு வந்து அந்த சண்டைக்காட்சியை முழு ஒத்துழைப்புடன் சிறப்பாக நடித்து முடித்தார். அவர் இந்தத் திரைப்படத்தின் நாயகனாக கிடைத்தது எங்கள் அனைவரின் பாக்கியமாக கருதுகிறேன்.










**கேள்வி: உண்மை சம்பவமான இந்த டைகர் நாகேஸ்வர ராவ் திரைப்படத்தை எடுக்க வேண்டும் என்பது உங்களுக்கு நீண்ட நாள் திட்டமா அல்லது சமீபத்தில் நினைத்தீர்களா? இந்தத் திரைப்படத்தை ரவி தேஜாவை தேர்ந்தெடுத்ததற்கு என்ன காரணம்?**

பதில்: நான் தமிழில் ”நாயகன்” படத்தைப் பார்த்தபோது அதைப்போன்ற ஒரு திரைப்படத்தை இயக்கவேண்டும் என்று நினைத்தேன். பொதுவாக பலரும் புகழ் பெற்ற அரசியல்வாதிகள், விளையாட்டு வீரர்கள் போன்றவர்களைப் பற்றிய திரைப்படத்தை இயக்குகிறார்கள். ஆனால் இது வரை வெளிச்சத்திற்கு வெளிவராத ஒரு உண்மைப் போராளியின் கதையை திரைப்படமாக இயக்க வேண்டும் என்று நினைத்து தேடியபோது டைகர் நாகேஸ்வர ராவின் வாழ்க்கையைப் பற்றி தெரிந்து கொள்ள முடிந்தது. நான் அவருடைய குடும்பத்தினர் மற்றும் நண்பர்களை சந்தித்து அவரைப் பற்றிய பல செய்திகளை சேகரித்துப் பிறகு இந்த திரைப்படத்தின் கதைக் களத்தை அமைத்தேன். இதில் கதாபாத்திரத்திற்கு தக்கபடி தன்னுடைய உடல்மொழியை மாற்றி ரசிகர்கள் பாராட்டும் வகையில் நடிப்பவரான ஹீரோ ரவி தேஜா அவர்கள் நடித்தால் மிகவும் சிறப்பாக இருக்கும் என்று அவரிடம் கதையைச் சொன்னவுடன் ஒப்புதல் அளித்து மிகவும் உற்சாகத்துடன் இதில் நடித்துக் கொடுத்தார்.

**கேள்வி: நீங்கள் முதல் திரைப்படம் இயக்கியதற்கும் இந்தத் திரைப்படம் இயக்கிதற்கும் உள்ள வித்தியாசம் என்ன?**

பதில்: நான் இயக்கிய முதல் திரைப்படம் சிறிய பட்ஜெட் படமாகும். அந்தத் திரைப்படத்தை ஒரு விசிட்டிங் கார்டைப் போல செய்ததாகவே கருதினேன். ஆனால் இந்தத் திரைப்படம் மிகவும் பிரமாண்டமான முறையில் சண்டைக்காட்சிகள் மற்றும் ஆக்ஷன் நிறைந்ததாக இயக்கினேன். என்னுடைய முழுத்திறமையையும் வெளிப்படுத்துவதற்கு இந்தத் திரைப்படம் ஒரு வாய்ப்பாக அமைந்ததாகக் கருதுகிறேன்.

**கேள்வி: இந்த திரைப்படத்தினை ஹிந்தி டப்பிங் செய்த விகாஸ் ஸ்ரீவத்ஸவ் ஃபிலிம்ஸ் டப்பிங் கம்பெனி பற்றி உங்கள் கருத்து என்ன?**

பதில்: விகாஸ் ஸ்ரீவத்ஸவ் ஒரு கடுமையான உழைப்பாளி. நேரம் குறைவாக இருந்தாலும் மிகவும் ஊக்கத்துடன் இந்தத் திரைப்படத்தின் டப்பிங்கை சிறந்த முறையில் செய்துக் கொடுத்தார்.

**கேள்வி: உங்கள் அடுத்த படம் என்ன? தெலுங்கா அல்லது பேன் இந்தியா திரைப்படமா?**

பதில்: என்னுடைய அடுத்த படம் பேன் இந்தியா படம் தான். அடுத்த ஒரு மாதத்தில் அதைப் பற்றி தெரிவிக்க இருக்கிறோம்.

**கேள்வி: பேன் இந்தியா திரைப்படம் இயக்கும்போது தெலுங்கு நடிகர்களை மட்டும் வைத்து இயக்கப் போகிறீர்களா? அல்லது அவர்களுடன் சேர்த்து பிற மொழி நடிகர்களையும் சேர்த்து இயக்க நினைக்கிறீர்களா?**

பதில்: குறிப்பாக தெலுங்கு நடிகர்கள் என்று இல்லாமல், தமிழ், மலையாளம், ஹிந்தி போன்ற மொழிகளில் உள்ள திறமை வாய்ந்த நடிகர்களை வைத்து இயக்க வேண்டும் என்பது என்னுடைய எண்ணம். ஏனென்றால் பல மொழிகளின் திறமை வாய்ந்த நடிகர்களின் நடிப்பால் நாம் சொல்லும் கதை அனைவரையும் சென்றடையும். இன்றைய சூழலில், எல்லா மொழிகளிலும் உள்ள திறமை மிக்க நடிகர்களின் நடிப்பில் வரும் திரைப்படங்கள் ரசிகர்களால் பெரிதும் வரவேற்கப்படுகின்றன.





**கேள்வி: இந்தத் திரைப்படத்தில் நடித்த பிற மொழி நடிகர்கள் உங்களுக்கு நல்ல ஒத்துழைப்பை அளித்தார்களா?**

பதில்: ஹிந்தியில் சுமார் 500 படங்களுக்கு மேல் நடித்துள்ள அனுபம் கேர் அவர்கள் இந்தத் திரைப்படத்தில் மிகவும் ஒத்துழைப்புடன் நடித்து கொடுத்தார். ஷூட்டிங் நடக்குமிடத்தில் ஒரு குழந்தையைப் போன்று மிகவும் ஈடுபாட்டுடன் இருந்து பல விஷயங்களைப் பற்றி கேட்டு தெரிந்துகொள்வார். ”கண்ணாலும் நடிக்க முடியும் என்று நான் டைரக்டர் வம்சியிடம் தான் கற்றுக் கொண்டேன். வயதில் சிறியவராக இருந்தாலும் வம்சியிடமிருந்து நான் பல விஷயங்கள் கற்றுக் கொண்டேன்” என்று அனுபம் கேர் தன்னுடைய பேட்டியில் தெரிவித்தது எனக்கு கிடைத்த கௌரவமாகக் கருதுகிறேன். நடிகர் பயிற்சிப் பள்ளியின் தலைவராக இருக்கும் அவ்வளவு பெரிய ஒரு நடிகர் இப்படி தெரிவித்தது எனக்கு மகிழ்ச்சியை அளித்ததுடன் சினிமா துறையில் எனக்கு பலருடைய பாராட்டைப் பெற்று கௌரவத்தையும் கொடுத்தது.

**கேள்வி: நீங்கள் சினிமா துறையை தேர்ந்தெடுத்ததற்கான காரணம் என்ன?**

பதில்: நான் சிறு வயதில் கிரிக்கெட்டை மிகவும் விரும்பி விளையாடுவேன். அப்போது ஜோனல், லீக் ஆகியவற்றில் பங்கேற்று விளையாடி பல வெற்றிகளைப் பெற்றிருக்கிறேன். ஆனால் என்னால் தொடர்ந்து கிரிக்கெட் விளையாட்டில் கவனம் செலுத்த முடியவில்லை. இப்போதும் எனக்கு நேரம் கிடைக்கும் போது நண்பர்களுடன் கிரிக்கெட் விளையாடுவேன். என்னுடைய அப்பா திரைப்படத் தயாரிப்பாளராக இருந்தார். நான் அவருடனேயே பயணிக்கும்படி ஆகிவிட்டது. மேலும் எனக்கு சினிமாத்துறை சார்ந்த நண்பர்கள் அதிகம் இருந்தனர். எனக்கு எப்போதும் கிரியேட்டிவாக யோசித்து செயல்படுவதுதான் மிகவும் பிடிக்கும். ஒரே இடத்தில் அமர்ந்து பணிபுரியும் வேலை நான் செய்ததில்லை. ஆகையால் இயக்குனரானேன். நான் சென்னையில் இயக்குனர் கௌதம் மேனனிடம் சுமார் 7 ஆண்டுகள் பணி புரிந்தேன். அவரிடம் பணி செய்ததால் கிடைத்த அனுபவத்தில் நான் சினிமா துறைக்கு வந்தேன். சிலருக்கு வாய்ப்புகள் கிடைக்கலாம், கிடைக்காமலும் போகலாம். என்னைப் பொருத்தவரை நமது திறமையைக் கொண்டு நாம் போராடினால் வெற்றி நிச்சயம். அப்படித்தான் நான் வெற்றி பெற்றேன். பொருளாதார வசதியோ அல்லது வாய்ப்புகளோ சுலபமாகக் கிடைத்து விடாது. என்னால் பெரிய பட்ஜெட் திரைப்படத்தை இயக்க முடியாது என்று பலரும் கேலி செய்தனர். ஆனால் நான் முழு முயற்சியுடனும் திறமையுடனும் செயல்பட்டதால் சுமார் 100 கோடி ரூபாய் செலவிலான இந்த பிரமாண்டமான திரைப்படத்தை இயக்கி வெற்றிகரமாக வெளிவந்து ப்ளாக் பஸ்டர் ஹிட்டானது. இப்போது என்னை கேலி செய்தவர்களே வந்து கை கொடுத்துப் பாராட்டும் போது மிகவும் மகிழ்ச்சியாக உள்ளது.

**கேள்வி: திரைப்படங்களை இயஉங்களுக்குப்க்குவதுடன் பிடித்த வேறு விஷயங்கள் என்ன?**

பதில்: எனக்கு பல்வேறு கலாச்சாரங்களின் மீது ஈடுபாடு அதிகம் என்பதால் நான் பல இடங்களுக்குச் சென்று அங்கிருக்கும் மக்களின் கலாச்சாரங்களைப் பற்றி தெரிந்து கொள்வேன்.



**கேள்வி: உங்கள் திரைப்படங்களில் புதுமுகங்களுக்கு வாய்ப்பு அளிப்பீர்களா?**

பதில்: நான் திறமை வாய்ந்த புதுமுகங்களுக்கு எப்போதும் வாய்ப்பளித்து வருகிறேன். எதிர்காலத்திலும் திறமை உள்ள புதுமுகங்களுக்கு வாய்ப்பளிப்பேன். என்னுடைய திரைப்பயணம் தமிழில் தான் தொடங்கியது. விரைவில் நான் தமிழ்ப்படமும் இயக்கவுள்ளேன்.

**கேள்வி: ஒரு இயக்குனருக்கு 24 மணி நேரம் போதாது. அப்படி இருக்கையில் நீங்கள் எப்படி உங்கள் குடும்பம் மற்றும் நண்பர்களுக்கு நேரத்தை எப்படி ஒதுக்குகிறீர்கள்?**

பதில்: நீங்கள் கேட்டது மிகவும் அனுபவமான கேள்வியாக உள்ளது. எனக்கு இன்னும் கல்யாணம் ஆகவில்லை. என் தாயாருடன் வசித்து வருகிறேன். என்னுடைய முழு நேரமும் சினிமா இயக்குவதைப் பற்றித்தான் செயல்பட்டுக் கொண்டிருப்பேன். ஒரு படம் இயக்கி முடித்த பிறகு சிறிய காலகட்டத்தில் என்னுடைய தாயாருடனும் நண்பர்களுடனும் நேரத்தைப் பகிர்ந்து கொள்வேன்.